
கர்த்தரைக் கெம்பீரமாய் பாடி
I Will Sing to the Lord
with Loud Praise
Album 21 Song 6

81 சங்கீதம்

கர்த்தரைக் கெம்பீரமாய் பாடி
யாக்கோபின் தேவனைக்குறித்து ஆர்ப்பரிப்பேன்
தம்புரு, வீணையையும் வாசித்து
சுரமண்டலத்தை ஒலிக்கச்செய்து சங்கீதம் பாடுவேன்

மாதப்பிறப்பிலும் நியமித்த காலத்திலும்
பண்டிகைநாட்களிலும் எக்காளம் ஊதுவேன்
இதுவே இஸ்ரவேலுக்குப் பிரமாணம் ஆனது
யாக்கோபின் தேவன் விதித்த நியாயமுமாயிருக்கிறது

கர்த்தர் சொல்லுகிறார் ஜனங்களே கேளுங்கள்
இஸ்ரவேலே நீ எனக்குச் செவிகொடு
உன் தோளை சுமைகளுக்கு நானே விலக்கினேன்
உன் கைகளை கூடைக்கு நீங்கலாக்கினேன்
(கர்த்தரை)

நெருக்கத்திலே நீ என்னைக் கூப்பிட்டாய்
நானே உன்னை தப்புவித்தேன்
இடிமுழக்கம் உண்டாகும் மறைவிடத்திலிருந்து
உனக்கு உத்தரவை நானே அருளினேன்
(கர்த்தரை)

வனாந்தரத்திலே உனக்கு உணவு தந்தேன்
கன்மலைகளைப் பிளந்து இறங்க தண்ணீர் தந்தேன்
மேரிபாவின் தண்ணீர்தடத்தில் உன்னை சோதித்தறிந்தேன்
யோர்தானை வற்றச்செய்து உன்னை கடக்கச்செய்தேன்
(கர்த்தரை)

உனக்குள் வேறு தேவன் உண்டாயிருக்க வேண்டாம்
அந்நிய தேவனை நீ நமஸ்கரிக்கவும் வேண்டாம்
உன்னை எகிப்திலிருந்து வரச்செய்த தேவன் நானே
உன் வாயை விரிவாய்த் திற நான் அதை நிரப்புவேன்
(கர்த்தரை)

KJC-DNN

October

27

Saturday

Wk 43 • 300-065

200

Priority

எந்தன் ஜனங்களோ எனக்குச் செவிகொடுக்கல
இஸ்ரவேலரோ என்னை விரும்பல
அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன்
தங்கள் யோசனையின்படி சுயமாய் நடந்தனர்

(கர்த்தர்)

எந்தன் ஜனங்களோ எனக்குச் செவிகொடுத்து
இஸ்ரவேலரே என் வழியில் நடந்தால் நலமே
நானே சீக்கிரத்தில் உன் எதிரியைத் தாழ்த்துவேன்
என் கையை உன் சத்துருவுக்கு விரோதமாய்த் திருப்புவேன்

(கர்த்தர்)

கர்த்தரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு அடங்குவார்கள்
கர்த்தரின் இச்சகம் பேசும் ஜனங்களும் அடங்குவார்கள்
உச்சிதமான கோதுமையினால் உன்னைப் போஷிப்பார்
கன்மலையின் தேனினாலும் உன்னைத் திருப்தியாக்குவார்

(கர்த்தர்)

Sunday

T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W	T	F	S	S	M	T	W
2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26	27	28	29	30	31

KJC-DNN

